பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

23 09 2025 TUESDAY 6.30 PM

## தலைப்புச் செய்திகள்

1. தூய்மையே சேவை இயக்கத்தில் நாட்டு மக்கள் அனைவரும் ஆர்வமுடன் பங்கேற்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.
2. புதிய இந்தியாவின் ஆதாரமாக புத்தாக்க தொழில்கள் திகழ்வதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.
3. தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் அடுத்த மாதம் 14-ஆம் தேதி தொடங்கும் என்று பேரவைத் தலைவர் திரு அப்பாவு தெரிவித்துள்ளார்.
4. தமிழகத்தில் விலைவாசியை கட்டுப்படுத்த திமுக அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.
5. Jing Shan சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Ankita Raina – Rutuja Bhosale இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-- இனி விரிவான செய்திகள் –

<<<<<<<<>>>>>>

தூய்மையே சேவை இயக்கத்தில் நாட்டு மக்கள் அனைவரும் ஆர்வமுடன் பங்கேற்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மக்களின் ஒட்டுமொத்த பொறுப்புணர்வையும், நாட்டின் பெருமையையும் வெளிப்படுத்தும் நோக்கில், இந்த இயக்கம் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

நாளை மறுநாள் நடைபெறும் தூய்மையே சேவை விழாவில் அனைவரும் பங்கேற்று காலை எட்டு மணிமுதல் தூய்மைப்பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நாளில், பண்டிட் தீன் தயாள் உபாத்யாயாவின் பிறந்த நாள் விழா கொண்டாடப்படுவதையும் பிரதமர் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<<>>>>>>

புதிய இந்தியாவின் ஆதாரமாக புத்தாக்க தொழில்கள் உள்ளன என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் காந்தி நகரில் புத்தாக்க தொழில்களுக்கான இரண்டு நாள் கருத்தரங்கை தொடங்கிவைத்து பேசிய அவர், கடந்த பத்தாண்டுகளில் நாட்டில் புத்தாக்க தொழில்களின் கட்டமைப்பு முன்எப்போதும் இல்லாத அளவிற்கு வளர்ச்சி பெற்றிருப்பதாக தெரிவித்தார்.

புத்தாக்க தொழில்களை ஊக்குவிப்பதில் உலகின் மூன்றாவது பெரிய நாடாக இந்தியா உள்ளது என்றும் அவர் கூறினார்.

நாட்டில் உள்ள இளைஞர்களின் சக்தி வலிமைமிக்கது என்று குறிப்பிட்ட அவர், உலகின் புதிய கண்டுபிடிப்புகளுக்கான பட்டியலில் இந்தியா அடுத்த மூன்றாண்டுகளில் முதல் பத்து இடங்களுக்குள் வந்துவிடும் என்றும் தெரிவித்தார்.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் கடந்த 11 ஆண்டுகளில் புத்தாக்க நிறுவனங்கள் சிறிய நகரங்களில் கூட விரிவடைந்திருப்பதாக தெரிவித்தார்.

இந்நிறுவனங்கள் மூலம், ஒன்று புள்ளி ஏழு ஒன்பது மில்லியன் மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருப்பதாகவும் திரு அமித் ஷா குறிப்பிட்டார்

<<<<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் அடுத்த மாதம் 14-ஆம் தேதி தொடங்கும் என்று பேரவைத் தலைவர் திரு அப்பாவு அறிவித்துள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த கூட்டத்தொடர் நான்கு முதல் ஐந்து நாட்கள் வரையே நடைபெறும் என்றும் முதல் நாளில் மறைந்த உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தப்படும் என்று கூறினார்.

பின்னர் அலுவல் ஆய்வுக்குழு கூடி பேரவை நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்யும் என்று தெரிவித்தார்.

இந்த கூட்டத்தொடரில் நிதியமைச்சர் திரு தங்கம் தென்னரசு, துணை மானியக்கோரிக்கைகளை தாக்கல் செய்வார் என்றும் திரு அப்பாவு தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>

தமிழகத்திற்கு உரிய நிதியை மத்திய அரசு விடுவிக்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின்கீழ், தமிழகத்திற்கான நிதியை விடுவிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

மக்களுக்கான நிதி விடுவிக்கப்பட்டால்தான் அவர்கள் அதன் பயனை பெற முடியும் என்றும் அந்த பதிவில் திரு மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<<>>>>>>

தமிழகத்தில் விலைவாசியை கட்டுப்படுத்த திமுக அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று நீலகிரி மாவட்டம் குன்னூரில் பொதுமக்களிடையே உரையாற்றிய அவர், கடந்த அஇஅதிமுக ஆட்சியில் விலைவாசியை கட்டுப்படுத்த நிதி ஒதுக்கப்பட்டு, அண்டை மாநிலங்களில் இருந்து அத்தியாவசியப் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு குறைந்த விலையில் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விற்பனை செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

மாநிலத்தில் அனைத்துப்பகுதிகளிலும் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்து விட்டதாக கூறிய அவர், இளைஞர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மீண்டும் அஇஅதிமுக ஆட்சிக்கு வந்தால், போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்த உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

உள்ளாட்சி அமைப்புகள் மூலம் கடுமையான வரி உயர்வு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், குடிநீர் வரி, வீட்டுவரி, கடை வரி என அனைத்தும் உச்சத்தில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் அனைத்துத்துறைகளிலும் ஊழல் மலிந்துவிட்டதாகவும் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டினார்.

<<<<<<<<>>>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு காரணமாக, நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி பெறும் என்று பிஜேபி தேசிய மகளிர் அணித்தலைவர் திருமதி வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

கோவை கணபதி பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், வரி குறைப்பு குறித்து மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும், தாங்கள் வாங்கும் அத்தியாவசியப் பொருட்களுக்கு வரி குறைப்பு அடிப்படையில் விலையும் குறைக்கப்பட்டதா என்பதை உறுதி செய்ய வேண்டும் என்று கூறினார்.

அனைத்து கடைகளிலும் விலை வித்தியாசம் குறித்த பட்டியலை வைக்க வேண்டும் என்றும், இதனால் மக்களின் வாங்கும் தன்மை அதிகரிக்கும் என்றும் திருமதி வானதி சீனிவாசன் தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு நாடு முழுவதிலும் உள்ள மக்கள் வரவேற்பு தெரிவித்து வருகின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்த வணிகர்கள் இந்த நடவடிக்கை மூலம் மேற்கொள்ளப்பட்ட வரி குறைப்பு காரணமாக அத்தியாவசிய மற்றும் இடுபொருட்களின் விலைகள் குறைந்து தங்களது வாழ்வாதாரம் உயர்ந்திருப்பதாக தெரிவித்தனர்.

<<<<<<<<>>>>>>>

தேசிய ஆயுர்வேத தினத்தையொட்டி இன்று நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

ஆரோக்கியத்தை பராமரிப்பதிலும், நோயுற்றவர்களின் நோய்களை நிர்வகிப்பதிலும் ஆயுர்வேதத்தின் பங்கு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி மண்டல ஆயுர்வேதா ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் சென்னை தரமணியில் நடைபெற்றது.

இதனிடையே, ராணிப்பேட்டை மாவட்டம் மேல்களத்தூரை சேர்ந்த ஆயுர்வேத மருத்துவர் திருமதி ஸ்ரீஜா, ஆயுர்வேத மருத்துவம் மனித வாழ்வுடன் இயற்கையோடு ஒன்றியதாகும் என்று தெரிவித்துள்ளார்.

<<<<<<<<>>>>>>

கோயம்புத்தூர் – சென்னை சென்டரல் இடையே வரும் 28-ஆம் தேதிமுதல் வராந்திர சிறப்பு ரயில், தெற்கு ரயில்வே இயக்குகிறது.

இம்மாதம் 28, அடுத்த மாதம் 5 மற்றும் 12 தேதிகளில் இரவு மணி 11.30-க்கு கோவையிலிருந்து இந்த வாராந்திர சிறப்பு ரயில் புறப்படுகிறது.

மறுமார்க்கத்தில் சென்னை சென்ட்ரலில் இருந்து இம்மாதம் 29, அடுத்த மாதம் 6 மற்றும் 13 தேதிகளில் மாலை மணி 6.35-க்கு சென்னை சென்ட்ரலில் இருந்து இந்த சிறப்பு ரயில் புறப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ரயிலுக்கான முன்பதிவு நாளை தொடங்குகிறது.

<<<<<<<<>>>>>>

மாவட்டச் செய்திகள்

சென்னை திரு வி க நகர் பகுதியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மாநில அமைச்சர் திரு சேகர்பாபு கலந்துகொண்டு கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தை வழங்கினார்.

----------------

சென்னை மாவட்டத்தில் தேர்தல் வாக்குச்சாவடிகள் மறுசீரமைப்பு தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் உடனான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் திரு குமரகுருபரன் தலைமையில் இன்று நடைபெற்றது.

-------------------

தருமபுரி மாவட்டத்தில் ஏழாவது புத்தகத் திருவிழா வரும் 26-ஆம் தேதி முதல், அக்டோபர் ஐந்தாம் தேதிவரை நடைபெறவுள்ளது. இதுதொடர்பான விழிப்புணர்வு வாகனத்தை ஆட்சியர் திரு சதீஷ் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

---------------

*திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில், தமிழ்நாடு மாநில தொடக்க கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர் சங்கம் சார்பில் எட்டு மாவட்ட நிர்வாகிகள் கலந்துகொண்ட ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெற்றது.*

--------------------

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

*Jing Shan சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Ankita Raina – Rutuja Bhosale இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-1, 6-3 என்ற செட் கணக்கில், சீனாவின் Chengyiyi Yuan – தென்கொரியாவின் Na Ri kim இணையை வென்றது.*

*மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் Riya Bhatia 6-4, 1-6, 6-3 என்ற செட் கணக்கில், சீனாவின் Xinyu Gao -வை வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*<<<<<<<<>>>>>>>*